2008 மே 7]

இருக்கக்கூடிய மாணவர்கள், பக்கத்திலே மூன்று கிலோ மீட்டருக்குள்ளாக இருக்கக்கூடிய பள்ளிக்குச் செல்லக்கூடிய நிலைமை இருக்கிறது. வரக்கூடிய காலங்களில்—அரசினுடைய நிதிநிலைமைக்கு ஏற்ப, பிற்காலங்களில் அதுபற்றி நாம் யோசிக்க முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 218, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

218—

மரக் கன்று நடுதல்

***29370—திரு. எஸ்.ஆர். இராஜா:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதியில் சுனாமியால் பாதிக்கப்பட்ட கடலோரப் பகுதிகளில் வனத் துறைமூலம் மரக் கன்றுகளை நட்டுப் பராமரிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தாம்பரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, சுனாமியால் பாதிக்கப்பட்ட கடலோரப் பகுதிகளில் மரக் கன்றுகள் ஏதும் நடப்படவில்லை. தாம்பரம் தொகுதியில் உத்தண்டி முதல் ஒட்டியம்பாக்கம் வரையிலான பகுதியில் மரக் கன்றுகளை நடவு செய்ய இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இப்பணிகள் 2008-2009 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா.*

திரு. எஸ்.ஆர். இராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லிய விளக்கத்தை நான் ஏற்றுக்கொண்டு, தாம்பரம் தொகுதியிலே நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நேரடியாக சில இடங்களைப்

[2008 மே 7

பார்வையிட்டார்கள். அப்படிப் பார்வையிட்டதிலே, திருநீர்மலை சாலை என்ற ஒரு சாலையை 50, 60 ஆண்டுகளாகப் பயன்படுத்திக்கொண்டிருந்தார்கள். அந்தச் சாலை ஹைவேஸ் சாலையையும், தாம்பரம் நகராட்சி சாலையையும் இணைக்கின்ற சாலை. தாம்பரம் நகராட்சியில் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அந்தச் சாலையைப் போடமுடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தச் சாலையைப் போடுவதற்குண்டான உத்தரவு வழங்கவேண்டுமென்றும், அதேபோல கம்யூனிஸ்டு இயக்கத்தினுடைய முதுபெரும் தலைவர், மறைந்த தோழர் ஜீவானந்தம் அவர்கள் தாம்பரம் பகுதியிலே வாழ்ந்தவர். குறிப்பாக, அந்தப் பகுதிக்குக் கஸ்தூரிபாய் நகர் என்ற பெயர் இருக்கிறது. 9-வது வட்டம், 8-வது வட்டம், 7-வது வட்டம், அந்தக் காலத்திலே அங்கே ஒவ்வொரு சாலைக்கும், ஜீவா தெரு, அண்ணா தெரு, ஜாகீர் உசேன் தெரு, சுப்ரமணிய சிவா தெரு, பகத் சிங் தெரு, சிங்காரவேலர் தெரு, வ.உ.சி. தெரு என்று அரசியல் தலைவர்களின் பெயர்களில் 50 ஆண்டு காலமாக வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அந்தப் பகுதியிலே இருப்பவர்களுக்குப் பட்டா வழங்க முடியுமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ்.ஆர். இராஜா, பட்டா வழங்க வனத் துறை அமைச்சரால் எப்படி முடியும்? வனத் துறை அமைச்சர், நீங்கள் பதில் சொல்கிறீர்களா?

மாண்புமிகு திரு. என். செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வன நிலங்களைத் தனியாருக்குப் பட்டா வழங்குகின்ற உரிமை மாநில அரசுக்கு இல்லை. எனவே, அதை வழங்க முடியாது. ஆனால் அவர் நீண்ட நெடுங்காலமாக இருந்த சாலையைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார். நான் நேரில் பார்த்தபோது, மாண்புமிகு உறுப்பினர் அவர்களிடம் தெரிவித்துவிட்டு வந்திருக்கிறேன். இதில் சில வரைமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறேன். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை அணுகி அதற்குரிய அந்த வரைமுறைகளைக் கடைப்பிடித்தால், மத்திய அரசுக்கு அனுப்பி, அவர்களுடைய அனுமதியைப் பெற்று, அந்த இடம் மாநில அரசுக்கு மாற்றப்பட்டு, சாலைகள் அமைக்க ஏற்பாடு செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

2008 மே 7]

திரு. எஸ்.ஆர். இராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழக முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்கள், சில திட்டங்களைக் காலத்திற்கு ஏற்ப மாற்றக்கூடிய ஒரு சூழ்நிலையை இன்றைக்கு உருவாக்கிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, 50, 60 ஆண்டுகளுக்கு முன்பாகப் போடப்பட்ட அந்த உத்தரவை—வனத் துறையின் மைய அலுவலகமே தாம்பரத்தில் அதே பகுதியிலே இருந்துகொண்டிருக்கிறது. ஆக, இப்போது மக்களுடைய தேவையை உணர்ந்து, 60 ஆண்டு காலம், 70 ஆண்டு காலமாக வாழ்கின்ற அந்த மக்களுக்கு, குறிப்பாக கம்யூனிஸ்டு இயக்கத் தோழர் திரு. ஜீவானந்தம் அவர்கள் அதே பகுதியிலே வாழ்ந்தவர் என்ற காரணத்தினால், அந்தப் பகுதியில் இருக்கிற மக்களுக்கு அரசு உத்தரவைத் தளர்த்தி, அந்தப் பகுதி மக்களுக்குத் தர வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கலந்து, அதுபற்றி அறிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞா. ஜாண் ஜோசப்.

திரு. ஞா. ஜாண் ஜோசப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டம், விளவங்கோடு தொகுதிக்குட்பட்ட சிற்றாறு அணை-1, சிற்றாறு அணை-2 பகுதிகளில் ஏராளமான தரிசு பூமி கிடக்கிறது. அந்த பூமியில் மரக் கன்றுகளை நட்டு, செயற்கை வனத்தை உருவாக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் சார்பாக, மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்கள் 4-வது முறை முதலமைச்சராக இருந்த நேரத்தில்தான் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் என்ற ஒரு திட்டத்தை உருவாக்கி, ஜப்பானிய பன்னாட்டுக் கூட்டுறவு வங்கியிடம் நிதி உதவி பெற்று, கடன் பெற்று,

அந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. எனவே, அதுபோன்று இடம் இருக்குமேயானால், அதை அலுவலர்களிடம் சொல்லி, மரக் கன்றுகளை நடுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 219, மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

219—

கால்நடை மருத்துவமனை

***38716—திரு. எச். வசந்தகுமார்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரி தொகுதி, நாங்குநேரி ஊராட்சி ஒன்றியம், மருதகுளம் கிராமத்தில் புதிய கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) நாங்குநேரி தொகுதி, நாங்குநேரி ஊராட்சி ஒன்றியம், மருதகுளம் கிராமத்தில் புதிய கால்நடை மருத்துவமனை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்வி எழாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார்.

திரு. எச். வசந்தகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருதகுளத்திலிருந்து 15 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள கள்ளத்தி என்ற கிராமத்திலேதான் ஒரு ஆஸ்பத்திரி இருக்கிறது. அதே மாதிரி, மருதகுளத்திலிருந்து நாங்குநேரிக்கு 15 கிலோ மீட்டர் போனால்தான் ஒரு கால்நடை ஆஸ்பத்திரி இருக்கிறது. அதனாலே அமைச்சர் அவர்கள் கண்டிப்பாக மருதகுளத்திற்கு அமைத்துக் கொடுத்தால்தான், அங்கிருக்கிற அந்த விவசாயப் பெருமக்களுக்கும், அங்கே பால் கறந்து

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS